# மாவட்ட பேரிடர் மேலாண்மை முகமை

# தருமபுரி

மனித வாழ்க்கையில் பேரிடர்கள் ஒரு அங்கம் வகிக்கிகறது. பேரிடர்கள் ஏற்படுவதற்கு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலை காரணமாக இருப்பதில்லை. அவைகள் எந்த எல்லைகளும் இன்றி அனைத்து நாடுகளையும் பாதிப்புக்குள்ளாக்குகிறது. பேரிடர் என்ற சொல் கிரீக் மொழியில் " Astrom-bad star" என்பதிலிருந்து பெறப்பட்டதாகும் விபத்து, பெருநாசம் அல்லது இயற்கையினால் அல்லது மனிதனால் அல்லது விபத்தினால் அல்லது கவன குறைவால் ஏற்படும் மிகப்பெரும் அளவிவான மனித உயிர்கள் இழப்பு அல்லது மனிதனுக்கு ஏற்படும் துயர்கள் அல்லது சொத்துக்களுக்கு ஏற்படும் சேதம் மற்றும் அழிவு அல்லது சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் அல்லது மனிதனின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டு சமூகத்தில் இயற்கையினால் ஏற்படும் பெரும் சேதாரங்கள் ஆகியவைகளை குறிக்கும். (பேரிடர் மேலாண்மைச் சட்டம் -2005)

பேரிடர் மேலாண்மை என்பது திட்டமிடல், நடத்துவது, ஒருமுகப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக ஒருங்கிணைக்கும் ஒரு செயலாகும். பேரிடரின் விளைவுகளை தணிப்பதற்கான செயல்பாடுகளை பேரிடரின் போது அவசரகால நிலைகளில் செயல்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் பேரிடர் தாக்கத்தில் இருந்து மக்களைக் காக்கவும் பேரிடரின் அபாயத்தை தவிர்ப்பதற்கும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் பேரிடர் மேலாண்மை உள்ளடக்கியுள்ளது. பேரிடர் மேலாண்மை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முக்கிய பணிகளாவன பேரிடரை தடுப்பது, தணிப்பது, பேரிடருக்கு முன் தயார்நிலையில் இருத்தல், உடனடி மீட்புப் பணி மேற்கொள்ளுதல் மற்றும் பேரிடருக்குப் பிறகு மறுவாழ்வு மற்றும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்வது போன்றவையாகும்.

எந்த ஒரு பேரிடர் நிகழ்வின்போதும் தேவையான ஒரு நிறுவன அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் பேரிடர் மேலாண்மைத் திட்டங்களை வகுப்பது, அதனை நடைமுறைபடுத்துவதைக் கண்காணிப்பது, அரசாங்கத்தின் பல்வேறு பிரிவுகள் மூலம் பேரிடர்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பது, பேரிடர் தாக்கத்தின் விளைவுகளைத் தணிப்பது, ஒருங்கிணைந்த உடனடி மீட்புப் பணிகளை மேற்கொள்வது போன்றவற்றிற்காக அரசால் "பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005" (Disaster Management Act 2005) இயற்றப்பட்டது. 26.12.2005 அன்று இது குறித்து அறிவிக்கை வெளியிடப்பட்டது. தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணைக் குழுவை (National Disaster Management Authority) பிரதம மந்திரியின் தலைமையின் கீழ் ஏற்படுத்துவது, மாநில யூனியன் பிரதேச பேரிடர் மேலாண்மை ஆணைக் குழுக்களை மாநில முதலமைச்சர்கள்/நிர்வாகிகள் தலைமையில் ஏற்படுத்துவது மற்றும் மாவட்ட நடுவர்கள் (District Magistrates) தலைமையில் கீழ் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணைக் குழுக்களை ஏற்படுத்துவது ஆகியவை இந்த சட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

அரசாணை நிலை எண் 33, வருவாய் (பே-மே 2) சட்டம், 2005. பிரிவு 25(1) ரூ (2)-ன் கீழ் மாவட்ட பேரிடர் மேலாண்மை முகமையானது, கீழ்க்கண்டவாறு தமிழக ஆளுநர் அவர்களால் அமைக்கப்பட்டது.

1. மாவட்ட ஆட்சியர் - தலைவர் (Chairperson ex- officio)
2. மாவட்ட ஊராட்சி தலைவர் - துணைதலைவர்(Co-Chairperson(ex -officio))
   (District Panchayat Chairman)
3. காவல் கண்காணிப்பாளர்(S.P) - உறுப்பினர்
4. மாவட்ட வருவாய் அலுவலர் - முதன்மை செயல் அலுவலர்
   (Chief Executive officer (ex -officio))
5. இணை இயக்குநர், சுகாதாரம் - உறுப்பினர்
6. மாவட்ட ஆட்சியரின்
   நேர்முக உதவியாளர்(பொது) - உறுப்பினர்
7. கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) /
   திட்ட அலுவலர் - மாவட்ட ஊரக - உறுப்பினர்
   வளர்ச்சி முகமை

தேசிய மற்றும் மாநில ஆணைக்குழுக்களின் வழகாட்டுதலின்படி மாவட்ட பேரிடர் மேலாண்மை முகமையானது மாவட்டத்திற்கான திட்டங்களை வகுத்தும் பேரிடர் மேலாண்மையில் தேவையான நடவடிக்கைகள் எடுத்தும், நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தும் செயல்படும். இம்முகமையானது பேரிடர் மேலாண்மை நடவடிக்கைக்கென எந்த ஒரு துறை சார்ந்த அலுவலரையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாவட்ட அளவில் பேரிடர்மேலாண்மைத் திட்டங்களை நெறிமுறைப்படுத்தியும், பேரிடரை சிறப்பான முறையில் கணிக்கும் வகையிலும், உடனடியாக செயல்படும் வகையிலும், பேரிடர் மேலாண்மைச் சட்டம், பிரிவு 31-ன் படி மாவட்ட மேலாண்மைச் திட்டம் கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

1. உயிரிழப்புகளை குறைத்தல்.
2. சொத்துச் சேதாரங்களை குறைத்தல்.
3. பொருளாதாரத் தடைகளை குறைத்தல்.

இந்த ஆவணமானது பின்வருபவைகளை உள்ளடக்கி இருக்கும்.

1. மாவட்டத்தில் பல்வேறு பேரிடர் பாதிப்புக்கு உள்ளாகும் பகுதிகள்.
2. மாவட்ட அளவில் அரசுத் துறைகள் மற்றும் உள்ளூர் ஆணைக் குழுக்கள் எடுக்கவேண்டிய முன் தடுப்பு மற்றும் பேரிடர் தணிப்பு நடவடிக்கை
3. மாவட்ட அளவில் அரசுத் துறைகள் மற்றும் உள்ளூர் ஆணைக் குழுக்கள் எந்தவொரு பேரிடர் சூழல் ஆபத்துகளையும் கையாளும் வகையில் திறமைகள் கட்டமைப்பு மற்றும் தயார் நிலை அமைப்புகளை தயாராக வைத்திருத்தல்.
4. பேரிடரின் போது செயல்படுத்தலும், செயல்பாடு அமைப்புத் திட்டங்கள் உருவாக்குதலும்.

❖ மாவட்ட அளவில் அரசுத் துறைகள் மற்றும் உள்ளூர் ஆணைக் குழுக்களுக்கு பொறுப்பு ஒதுக்கீடு செய்தல்.

❖ பேரிடர் போதும், பேரிடர் நிவாரண நடவடிக்கைகள் போதும் முறையான பதிலளித்தல் / கடமையாற்றுதல்.

❖ அத்தியாவசியப் பொருட்கள், ஆதார சாதனங்கள் கொள்முதல் செய்தல்.

❖ தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் தொடர்புகள் அமைப்புகள் உருவாக்குவது.

❖ தேவையான தகவல்களை பொது மக்களுக்கு பரவச் செய்தல் / தெரியப்படுத்தல்.

மாவட்ட திட்டத்தினைப் போன்று முன்தடுப்பு, பேரிடர் தணிப்பு (ம) தயார் நிலை நடவடிக்கைகளை தன்னகத்தே கொண்டு வட்டப் பேரிடர் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டமானது பல்வேறு பேரிடர்களை எதிர்கொள்ளும் சூழலில், எவ்வாறு திறம்பட அதனை மேலாண்மை செய்வது என்பதற்கென மாவட்டத்தின் பேரிடர் மேலாண்மைத் திட்டமும், தருமபுரி மாவட்டம் உள்ளடக்கியுள்ள தருமபுரி, பாலக்கோடு, பென்னாகரம், அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டங்களுக்கென வட்டப்பேரிடர் மேலாண்மைத் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் பேரிடர்களை திறம்பட மேலாண்மை செய்ய ஏதுவாக அனைத்து நிலையிலுள்ள வருவாய்த்துறை மற்றும் தொடர்புடைய அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் உள்ளூர் ஆணைக் குழுக்களுக்கு அரசின் வழிகாட்டுதலின்படி பேரிடர் மேலாண்மை மற்றும் தனிப்பு குறித்த திறன்வளர்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

அவ்வப்போது போலிகைப் பயிற்சிகளும் (Mock drills) நடத்திக் காட்டப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் ஏற்படும் எந்த ஒரு பாதிப்புகளையும் எதிர்கொண்டு அவற்றை திறம்பட மேலாண்மை செய்யும் வகையில், கட்டணமில்லா தொலைபேசி எண்கள் **1077, 1800 425 7016, 1800 425 1071, 8903891077** போன்றவற்றினைக் கொண்டு மாவட்டத்தில் அவசரகால செயல்பாட்டு மையமானது வருடம் முழுவதும் 24 மணிநேரமும் (24X7) இயங்கி வருகிறது. இம்மையத்தின் கைப்பேசி எண் **"8903891077"** மூலமாக பொதுமக்கள் தங்களது பாதிப்புகளை "வாட்ஸ் அப்" வழியாகவும் அனுப்பி வைக்கும் வண்ணம் தமிழக அரசின் கூடுதல் தலைமை செயலர் /வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் முனைவர். டி.எஸ்.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்களால் கடந்த 18.03.2015 அன்று இவ்வசதி துவக்கி வைக்கப்பட்டு, அவசரகால செயல்பாட்டு மையமானது நவீனப்படுத்தப்பட்டுள்ளது.